செஞ்சி தொகுதி, பருதிபுரம் ஊராட்சி, பெரிய நொளம்பை கிராமத்தில் புதிய நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

செஞ்சி தொகுதி, பருதிபுரம் ஊராட்சி, பெரிய நொளம்பை கிராமத்தில் நியாய விலைக் கடை, 453 குடும்ப அட்டைகளுடன் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, மேற்படி நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 105, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

105—

இருவழிச் சாலை

***974—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையிலிருந்து சண்முகபுரம், மகாதேவன்குளம், சுவிசேசபுரம் வழியாக இட்டமொழி வரை செல்லும் சாலையை இருவழிச் சாலையாக அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

திசையன்விளையிலிருந்து சண்முகபுரம், மகாதேவன்குளம், சுவிசேசபுரம் வழியாக இட்டமொழி வரை செல்லும் சாலை

ஒருவழிச் சாலை. இந்த நிதியாண்டில் முன்னுரிமை கொடுத்து நிதிநிலைக்கேற்ப அதனை மற்றும் போக்குவரத்து செறிவுக்கேற்ப இடைவழித் தடமாக அகலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள், இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதியில் தாலுகா அலுவலகம் அருகே இரயில்வே மேம்பாலம் கட்டப்பட்டு வருகிறது. அங்கு ஏற்கெனவே ஒரு போராட்டம் நடத்தி, அந்த* Service road*—ஐ உடனடியாகக் கட்ட வேண்டும் என்று சொன்னதற்கு, நேரடியாக அந்தப் போராட்டம் செய்தவர்களையெல்லாம் கலந்தாலோசித்து, விரைவாக அந்தப் பணி முடிக்கப்படும் என்று உறுதி அளித்து வந்திருக்கின்றேன். உடனடியாக அந்தப் பணி துவங்கி இருக்கிறது என்றுகூட கேள்விப்பட்டேன். அதைத் துரிதப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பாலப் பணிகளை வேகமாக, துரிதமாகச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். இப்பொழுது அந்தப் பணி துவக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல பல்வேறு கோரிக்கைகள் அரசுக்கு வந்துகொண்டிருக்கின்றன. விரைவாக அந்தப் பணி முடிக்கப்பட வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையின் அடிப்படையிலே, விரைவாக அந்தப் பணிகள் நடைபெறுவதற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள். (குறுக்கீடு) திரு. பாலகிருஷ்ணன், உட்காருங்கள்.*

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையினுடைய 48—வது வார்டில் கீழப்பெருமாள் திருவீதியிலுள்ள மாநகராட்சி இடத்தில் உள்ள ரேஷன் கடை கட்டடம் பழுதடைந்துள்ளது. அதற்குப் புதிய கட்டடம் கட்டித் தரப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி கேட்டவர் வரவில்லை. அதனால் இதற்குத்தான் நீங்கள் துணைக் கேள்வி கேட்க வேண்டும். ஏதாவது கேள்வி உண்டா இதற்கு? (குறுக்கீடு) இல்லையென்றால் உட்காருங்கள்.

வினா வரிசை எண் 106, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. செழியன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

107—

புதிய கட்டடம்

***985—திரு. கோவி. செழியன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டத்தில் ஏற்கெனவே இயங்கி வரும் வட்டாட்சியர் அலுவலகத்தினை சரி செய்யத் தேவைப்படும் தொகையினை மதிப்பீடு செய்து உரிய செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரப்பட்டுள்ளது. அச்செயற்குறிப்பு கிடைத்தவுடன் மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.